بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)**

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 29.05.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 29 May 2015 (Tamil)**

**ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தாம் இந்த உலகை விட்டுச் செல்கின்ற துக்கமான செய்தியுடன், இன்னொரு நற்செய்தியையும் கூறினார்கள். அதாவது, எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இறைவன் இரு வல்லமைகளைக் காட்டுகிறான். அதுவே அவனுடைய தொன்மையான நடைமுறையாக இருக்கிறது. எனவே இப்போது இறைவன் தனது தொன்மையான நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. மேலும் இரண்டாவது வல்லமையைப் பார்ப்பதும் உங்களுக்கு அவசியமாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தமானதாகும். அதன் தொடர் மறுமை வரை முடிவுறாது.**

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நாடும் வரை உங்களிடம் நுபுவ்வத் நிலை பெற்றிருக்கும். பிறகு ***கிலாஃபத் அலா மின்ஹாஜிந் நுபுவ்வத்*** நிலை பெற்றிருக்கும். அதாவது நபியின் வழியில் செல்லும் கிலாஃபத் நிலைபெற்றிருக்கும். அதனுடைய சொந்த பயன் இருக்காது. அது நபியின் பணியை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும். ஆனால் ராஷிதா கிலாஃபத்தாகிய இந்த கிலாஃபத் கொஞ்ச காலத்திற்குப் பிறகு முடிந்து விடும். இந்த அருட்கொடை உங்களிடமிருந்து பறித்துக் கொள்ளப்படும். பிறகு எப்படிப்பட்ட ஆட்சி நிலைபெறுமென்றால் அதனால் மக்கள் கஷ்டத்தை உணர்வார்கள். பிறகு அதை விட அதிகமாக பலவந்தமான ஆட்சி இருக்கும். பிறகு அல்லாஹ்வுடைய கருணை பீறிட்டெழும். **பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் நிலைபெறும்.**

இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு காலகட்டத்தில் ஆட்சி செய்த தலைவர்கள் தம்மை கலீஃபாக்கள் என்றனர். அவர்களின் அந்தஸ்து கலீஃபாக்களின் அந்தஸ்தாகும் என்று கூறினர். ஆனால் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தோன்றிய நான்கு கலீஃபாக்களுக்கு மட்டுமே குலஃபாயே ராஷிதீன் (நேர்வழியில் உள்ள கலீஃபாக்கள்) என்ற அந்தஸ்தைக் கொடுக்கின்றனர் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்களின் காலகட்டமே கிலாஃபாத்தே ராஷிதாவின் கால கட்டம் என்று அழைக்கப்படுகிறது. அது குடும்ப ஆட்சியாக இருக்கவில்லை. மாறாக, நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்தின் மூலமாக அல்லாஹ் அவர்களுக்கு கிலாஃபத்தின் போர்வையைப் போர்த்தினான். ஆனால் இவர்களைத் தவிர மற்ற கலீஃபாக்கள் குடும்ப ஆட்சியையே நிலைநாட்டி வந்தனர். மேலும் (அதற்குப் பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும்; பிறகு பலவந்தமான ஆட்சி இருக்கும் என்ற) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. **முந்தைய இரண்டு விஷயங்களில் முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் நிறைவேறியிருக்கும்போது அவர்கள் கடைசியாகக் கூறிய இரண்டு விஷயங்களிலும் நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றே நிறைவேற வேண்டியதிருந்தது.** உலகாதாயம் மற்றும் முஸ்லிம்களின் சீர்குலைந்த நிலைமையைக் கண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மறுமை வரை

நிலைத்திருக்கும் ஷரீஅத்துடன் அனுப்பிய இறைவனின் கருணை பீறிட்டெழ இருந்தது. நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தை மீண்டும் உலகில் நிலைநாட்ட இருந்தது. மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செய்த வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தை நிலைநாட்டினான் என அஹ்மதிகளாகிய நாம் உறுதி கொள்கிறோம். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் உம்மதி நபி ஆகும் அந்தஸ்தை வழங்கி இருக்கும் அதே நேரத்தில் காத்தமுல் குலஃபாவின் அந்தஸ்தையும் வழங்கி இருக்கிறான்.** இனி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கிலாஃபத்தின் தொடர் அன்னாரின் உண்மையான தொண்டராகிய காத்தமுல் குலஃபா மூலமாகவே தொடர முடியும். எனவே நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் நிலை பெறும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நற்செய்தியில் இணைந்திருக்கும் நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். ***வஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்*** (இன்னும் அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கு மத்தியிலும் அவரை அனுப்புவான்) என்பதை தெளிவுபடுத்தியவாறு எந்த வரக்கூடியவர்களை முன்னவர்களுடன் இணைத்தார்களோ அவர்களில் நாம் இணைந்திருக்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அன்பிற்குரியவரைப் பற்றி, அவர் ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பூமிக்குக் கொண்டு வருவார் எனக் கூறினாரோ அவரை ஏற்றுக் கொள்பவர்களில் நாம் இருக்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த மஸீஹுக்கு, மஹ்திக்கு தனது சலாத்தை எட்ட வைக்குமாறு கூறினார்களோ அந்த கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கி இருக்கிறான். பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் முபாயியீன் நபர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அன்னாருக்குப் பிறகு தொடர்கின்ற கிலாஃபத்தின் தொடரில் இணையும் நல்வாய்ப்பையும் அல்லாஹ் நமக்கு வழங்கினான்.

எனவே அல்லாஹ்வின் இந்த எல்லா அருள்களும் ஒவ்வோர் அஹ்மதியிடமும் எதிர்பார்ப்பது என்னவெனில், அதற்கு நன்றி செலுத்தியவர்களாக அல்லாஹ்வின் இந்த தூதரை ஏற்றுக் கொண்டவர்களின் மீதுள்ள கடமையை நிறைவேற்றும் அளவிலான மாற்றங்களை நமது நிலைமைகளில் நாம் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் அந்த பைஅத்திற்கான உரிமையை நாம் நிறைவேற்றுபவர்களாவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பூமிக்குக் கொண்டு வர வேண்டியதிருந்தது. மேலும் தம்மை ஏற்றுக் கொள்பவர்களின் உள்ளங்களை ஈமானினால் நிரப்ப வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தப் பணியை செய்து காட்டினார்கள் என்பதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் நிச்சயமாக சாட்சியாளராவார். ஆனால் ஈமானை நிலைநாட்டுவது அவர்களின் வாழ்வுடன் எல்லைக்குட்பட்டதாக இருக்கவில்லை. அல்லது சில ஆண்டுகளுடன் எல்லைக்குட்பட்டதாக இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இருக்கும் என்ற நற்செய்தியை வழங்கி மவுனமாகி விட்டார்கள். அதன் பொருள், அந்த ஈமான் மறுமை வரை பூமியில் கண்ணியத்துடனும், மதிப்புடனும் நிலைபெற்றிருக்க வேண்டியதிருந்தது. தன்னை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்தவராகக் கருதும் ஒவ்வொருவருக்கும் அந்த ஈமானை தனது உள்ளத்தில் நிலைநாட்டி அதில் எப்போதும் நிலைபெறுவது கடமையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு அவர்களின் வழியில் செல்லக் கூடிய கிலாஃபத் அமைப்புடன் இணைந்து அந்த ஈமானின் தோற்றமாக மாறியவாறு அதை உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்புவதும், உலகில் தவ்ஹீதை நிலைநாட்டுவதும் இதை ஏற்றுக் கொள்பவர்களின் கடமையாகும். எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வுலகை விட்டு தாம் செல்லவிருக்கும் துக்கமான செய்தியுடன், இன்னொரு நற்செய்தியையும் வழங்கினார்கள். அதாவது, எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இறைவன் இரு வல்லமைகளைக் காட்டுகிறான். அதுவே அவனுடைய தொன்மையான நடைமுறையாக இருக்கிறது.

எனவே இப்போது இறைவன் தனது தொன்மையான நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. மேலும் அவர்கள் கூறினார்கள்: இரண்டாவது வல்லமையைப் பார்ப்பதும் உங்களுக்கு அவசியமாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை முடிவுறாது.

எனவே ஈமானை பூமியில் நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு இந்த இரண்டாவது வல்லமையை தொடரச் செய்தான். இந்த இரண்டாவது வல்லமை என்பது கிலாஃபத் அமைப்புதான் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே கிலாஃபத் அமைப்புக்கு மார்க்க முன்னேற்றத்துடன் முக்கியமான ஒரு தொடர்பு இருக்கிறது. மேலும் அது இஸ்லாமிய ஷரீஅத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். **கிலாஃபத் இல்லாமல் மார்க்க முன்னேற்றம் ஏற்படவே முடியாது. கிலாஃபத் இல்லாமல் ஜமாஅத்தின் ஒற்றுமை நிலைபெறவே முடியாது.** கிலாஃபத்துடன் இணைந்திருக்கும் நம்மில் ஒவ்வொருவரும் ஜமாஅத்தில் கிலாஃபத் தொடர்வது ஈமானின் பகுதியாகும் என்பதை அல்லாஹ்வின் அருளால் நன்கு அறிகிறார். அந்த மக்களின் தியாகங்களின் விளைவாக, அந்த மக்களின் ஈமானில் உறுதித்தன்மையின் விளைவாக இன்று அந்த பெரியவர்களின் தலைமுறையைச் சேர்ந்த நம்மில் பல இளைஞர்கள் கிலாஃபத் அமைப்பின் அருளிலிருந்து பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இது தொடர்பாக அதிகமான முயற்சியும், தியாகமும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் செய்தார்கள். அவர்கள் மீது குற்றம் சாட்டுபவர்கள் மிகப் பெரும் குற்றச்சாட்டுகளை செய்தனர். ஆனால் அவர்களின் உள்ளத்தின் நிலைமை கிலாஃபத் அமைப்பைக் காப்பாற்றுவதற்காக இருந்தது. அதன் ஒரு காட்சியை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் சொற்களிலேயே எடுத்துரைக்கிறேன்:

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது நான் (அதாவது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலியல்லாஹு அன்ஹு) மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களை அழைத்து, கிலாஃபத்தைப் பற்றி அது இருக்க வேண்டுமா? இருக்க வேண்டாமா? என எந்த சண்டையும் இடாதீர்கள். எவருடைய கையில் ஜமாஅத்தின் பயன் பாதுகாப்பாக இருக்குமோ, எது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு முயற்சி செய்ய முடியுமோ அப்படிப்பட்ட கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு மட்டும் உங்களுடைய சிந்தனையை எல்லக்குட்பட்டதாக வையுங்கள் என்று கூறினேன். மேலும் நான் மவ்லவி சாஹிபிடம், தனிப்பட்ட முறையில் நான் எனது உணர்வுகளை உங்களுக்காக தியாகம் செய்ய முடியும். ஆனால் கோட்பாட்டு பற்றிய கேள்வி வரும்போது கட்டாம் ஏற்படும். (அதாவது அதை விட்டுக் கொடுக்க முடியாது). ஏனெனில் கோட்பாட்டை விட்டுக் கொடுப்பது எந்நிலையிலும் ஆகுமானதன்று. எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம், நாங்கள் கிலாஃபத்தை ஒரு மார்க்க விவகாரமாகக் கருதுகிறோம். மேலும் கிலாஃபத் இருப்பதை அவசியமானதாக் கருதுகிறோம். **ஆனால் நீங்கள் கிலாஃபத் இருப்பதை தகாதது எனக் குறிப்பிட முடியாது. ஏனெனில் இப்போதுதான் ஒரு கலீஃபாவின் பைஅத்திலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. 6 ஆண்டுகளாக நீங்கள் நீங்கள் பைஅத் செய்து இருந்தீர்கள். மேலும் எது 6 ஆண்டுகளாக ஆகுமானதாக இருந்ததோ அது இனிமேலும் ஹராம் ஆக முடியாது.** எனவே நீங்கள் இதுவரை மேற்கொண்டு வந்திருக்கின்ற அந்த வழிமுறையை மேற்கொள்ளுங்கள். மேலும் எங்களின் கொள்கை, கோட்பாடுகளுக்கு எதிராக எங்களை கட்டாயப்படுத்தாதீர்கள். இதுவே நீதியின் எதிர்பார்ப்பு ஆகும் எனக் கூறினேன்.

அடுத்து, ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும் இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்கும் யார் பயனுள்ளவராக இருக்க முடியும் என்ற கேள்வியைப் பொருத்தவரை எந்த நபரின் மீது நீங்கள் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருப்பீர்களோ நாம் அவரை கலீஃபாவாக ஆக்கிக் கொள்வோம். (இது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மவ்லவி முஹம்மது அலி சாஹிப்

அவர்களிடம் கூறியதாகும்). ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களிடம், உங்களுடைய கவலைகளை நீக்கி விட்டேன். எனவே இப்போது யார் கலீஃபா ஆவார் என்ற கேள்விதான் இருக்க வேண்டுமே தவிர கலீஃபா இருக்கக் கூடாது என்ற கேள்வி இருக்கக் கூடாது என்றேன். அப்போது மவ்லவி சாஹிப், யார் கலீஃபா ஆவார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே நீங்கள் இதில் அழுத்தம் கொடுக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும் என்றார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவரிடம், யார் கலீஃபா ஆவார் என்பது எனக்குத் தெரியாது என்றார்கள். மேலும் **நீங்கள் யாரை தேர்ந்தெடுக்கிறீர்களோ அவரிடம் நான் பைஅத் செய்வேன் என்று இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.** ஆனால் மவ்லவி சாஹிப் ஏற்றுக்கொள்ள இருந்ததுமில்லை; ஏற்றுக்கொள்ளவுமில்லை.

பிறகு கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் கதவு திறக்கப்பட்டதும் மவ்லவி முஹம்மது அஹ்ஸன் அம்ரோஹி அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் (ரலி) அவர்களின் பெயரை முன்மொழிந்தார்கள். மேலும் நீங்கள் பைஅத் வாங்குங்கள் என ஜமாஅத் அவர்களை கட்டாயப்படுத்தியது. இவ்வாறு இரண்டாவது வல்லமை நிலைபெறுவதில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்ததை அல்லாஹ் தனது தூதரின் விஷயத்தை நிறைவேற்றியவாறு தோல்வியுறச் செய்தான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மீண்டும் ஒருமுறை நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தை நிலைநாட்டினான்.எவர்கள் கிலாஃபத்தை விட்டும் தூர விலகி இருந்தார்களோ அவர்கள் பெரிய மார்க்க அறிஞர்களாகவும் இருந்தனர்; படித்தவர்களாகவும் இருந்தனர்; அனுபவசாலியாகவும் இருந்தனர்; செல்வந்தர்களாகவும் செல்வாக்கு பெற்றவர்களாகவும் இருந்தனர். அஞ்சுமனின் எல்லா கருவூலங்களையும் தம்மிடம் கைப்பற்றி வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் தோல்வி மேல் தோல்வியடைந்து கொண்டே சென்றனர். மவ்லவி முஹம்மது அலி சாஹிப் இரண்டாவது கிலாஃபத்தின் தேர்ந்தெடுத்தலுக்குப் பிறகு காதியானிலிருந்து சென்று விட்டது மட்டுமல்லாமல் பைஅத் செய்யாத அவர்கள் கிலாஃபத் அமைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பெரிய குழப்பங்களை தொடர்ந்து பின்னரும் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எப்போதும் தோல்வியையே சந்திக்க வேண்டியது வந்தது. இன்று இது நடந்து 101 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் மிகவும் கடினமான நிலைமைகள் இருந்தாலும் காதியான் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது.

ஆக, இது அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அல்லாஹ்வின் ஆதரவாகும். இதை நாம் நாள்தோறும் கண்டு வருகிறோம். கிலாஃபத்துடன் இணைந்திருப்பவர்களுக்கு அல்லாஹ் வழங்குகின்ற அருள்களிலிருந்து ஜெர்மனியும் வெற்றிடமாக இல்லை. **அண்மையில் ஜெர்மனி ஜமாஅத்திலுள்ள அன்ஸாருல்லாஹ், லஜ்னா இமாயில்லாஹ் இரு கிளை அமைப்புகள் இணைந்து 5 மாடி கட்டடத்தை வாங்கினார்கள். 17 இலட்சம் யூரோ தொகைக்கு வாங்கப்பட்டுள்ளது.** கிலாஃபத்தின் எதிரிகள் ஒரு ரூபாயை விடக் குறைவான தொகையை வைத்து விட்டு இனி இந்த அமைப்பு எப்படி செயல்படுகிறது எனப் பார்ப்போம் என்று கூறி சிரித்தனர். இப்போது பாருங்கள். இந்த கிலாஃபத்துடன் தொடர்புடைய ஒரு நாட்டின் இரண்டு கிளை அமைப்புகள் ஏறக்குறைய **19 கோடி ரூபாயை விட அதிக பெறுமானமுள்ள** ஒரு பரந்த 5 மாடி கட்டடத்தை வாங்கியிருக்கிறார்கள். இப்போது இது அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனது ஆதரவு இல்லாமல் வேறு என்ன? எவர்கள் கிலாஃபத்தை விட்டு தனியாகி விட்டார்களோ அவர்களின் மேலிடத்து அமைப்பும் சீர்குலைந்து விட்டது. அல்லாஹ் ஜமாஅத்தின் உண்மையைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதுடன் கிலாஃபத்துடன் தனது ஆதரவு உதவியைப் பற்றியும் எவ்வாறு எடுத்துக் கூறுகிறான் என்பதைப் பார்க்கும்போது சில நேரத்தில் வியப்பு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஒன்றிரண்டு சம்பவங்களை நான் இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நாடு நைஜீரியா. அங்குள்ள முபல்லிக் எழுதுகிறார்: புதிதாக பைஅத் செய்தவர்களுக்கான பயிற்சி வகுப்பில் 10 இமாம்களுடன் ஒரு கிராமத்தின் சீஃபும் கலந்து கொண்டார். இமாம்களுடன் நீங்களும் ஏன் வந்து விட்டீர்கள்

என அவரிடம் கேட்டதற்கு, இது இமாம்களுக்கான வகுப்பாகும் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் நேற்று இரவு வகுப்பில் கலந்து கொள்வதற்காக இமாம் சாஹிபுக்கு தூது அனுப்பியபோது அவர் மறுத்து விட்டார். மேலும் நகரத்திலுள்ள வஹ்ஹாபியாகிய சுன்னி ஆலிம்கள் என்னிடம், அஹ்மதிகள் காஃபிர்கள் எனக் கூறினர் என்றார். சீஃப் கூறுகிறார்: அஹ்மதிகள் எப்படி காஃபிர்கள் ஆக முடியும்? என நினைத்து எனக்கு மிகவும் ஆச்சரியமும் துக்கமும் ஏற்பட்டது. மேலும் இவர்கள் காஃபிகள் என்றால் சீஃப் என்ற முறையில் நான்தான் இவர்களை இந்த கிராமத்தில் தப்லீக் செய்வதற்கு அனுமதியளித்தேன். பிறகு நான் இரட்டை காஃபிராகி விட்டேனே எனக் கூறுகிறார். எனவே நான் இரவில் அதிகமாக துஆ செய்தேன். அல்லாஹ்விடம் நேர்வழி காட்டுமாறு துஆ செய்தவாறு நான் தூங்கி விட்டேன். இரவில் நான் கனவில், முதலில் என் வீட்டில் வானத்திலிருந்து நட்சத்திரங்கள் இறங்குவதாகக் கண்டேன். பிறகு அதற்குப் பின்னால் சந்திரனும் இறங்குவதைக் கண்டேன். நான் அவற்றை அருகிலிருந்து பார்க்கின்றேன். ஆனால் அவற்றில் ஒளி இல்லை. பிறகு திடீரென்று **வெண்ணிற ஆடை அணிந்த ஒருவர் என் வீட்டில் நுழைகின்றார்.** அவர் அந்த வீட்டில் நுழைந்ததுமே அந்த நட்சத்திரங்கள் மற்றும் சந்திரன் அனைத்தும் வியற்பிற்குரிய முறையில் ஒளிபெற்று விடுகின்றன. முழு வீடும் ஒளியால் நிரம்பி காணப்பட்டது. மேலும் **இது அஹ்மதிய்யத்தின் ஒரு சிறந்த மனிதராவார் என்ற சிந்தனை எனது உள்ளத்தில் அழுத்தமாக நுழைந்தது.** நான் முன்னால் சென்று நீங்கள் அஹ்மதிகளின் முரப்பியா அல்லது கலீஃபாவா எனக் கேட்கிறேன். பிறகு நான் கண் விழித்து விட்டேன்.

முரப்பி சாஹிப் அவர்கள் அவருக்கு புகைப்படங்களைக் காட்டினார். ஆல்பத்தைக் காட்டினார்கள். அப்போது அவர் உடனே எனது புகைப்படத்தின் மீது விரல் வைத்தவாறு மீண்டும் மீண்டும் சத்தியம் செய்தவாறு, **இவரைத்தான் நான் என் வீட்டில் வானத்திலிருந்து இறங்கியதாகக் கண்டேன்;** இவருடைய வருகையினாலேயே என் வீடு ஒளிமிக்கதாக மாறியது எனக் கூறினார்.

பிறகு **கேம்பியாவிலிருந்து அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:** ஒரு கிராமத்தில் தப்லீக் செய்யப்பட்டது. அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை பற்றி கூறப்பட்டது. மேலும் அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்காக பைஅத் நிபந்தனைகள் படித்துக் காட்டப்பட்டது. அப்போது கிராமத்தின் இமாம் மற்றும் கிராமத்தின் முன்னேற்றக் கமிட்டிகளின் சேர்மேன்களும் ஒட்டுமொத்தமாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இமாம் மஹ்தியின் வருகை பற்றி முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். மேலும் இன்று முதன் முறையாக இமாம் மஹ்தியின் வருகை பற்றி நாங்கள் கேள்விப்படுகிறோம் எனக் கூறினர். மேலும் ஏறக்குறைய **350 பேர் கொண்ட அனைவரும் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தனர்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூறியது போன்று, இந்த இரண்டாவது வல்லமை (அதாவது கிலாஃபத்) இறைவனால் நிலைநாட்டப்பட்டதாகும். அதற்கு அவன் ஆதரவளிக்கும் காட்சிகளை நாம் கண்டு வருகிறோம். எனவே எவர்கள் தமது ஈமானில் உறுதியாக இருப்பார்களோ அவர்கள் அடையாளங்களயும், ஆதரவுகளையும் கண்டு கொண்டே செல்வார்கள். எனவே உங்கள் ஈமானை உறுதி செய்து கொண்டே இருங்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உங்கள் தொடர்பை ஏற்படுத்துங்கள். கிலாஃபத்தின் அருக்கொடையைப் பெறுபவர்களுக்கு அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ள இறைவனின் அந்த உரிமையை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். கிலாஃபத்தின் மூலமாக அச்சத்தை அமைதியாக மாற்றுவதாக வாக்குறுதியளித்துள்ளான். ஆனால் **அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுபவர்களுக்கு இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் முதல் உரிமை, யஃ புதூனனீ** என்பதாகும். அதாவது என்னை வணங்குங்கள். எனவே இந்த அருட்கொடையிலிருந்து பயன்பெற வேண்டுமென்றால் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றுங்கள். உங்களின் ஐவேளை தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். மேலும் அழகிய

முறையில் நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அடுத்து **லாயுஷ்ரிகூன பீ ஷய்ஆ.** எதனையும் எனக்கு இணையாக்காதீர்கள்.

ஆக, கிலாஃபத்துடன் இருக்கும் இந்த அன்பு மற்றும் கட்டுப்படுதல்தான் அல்லாஹ்வின் அருள்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. மேலும் சிறந்த விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் இது அல்லாஹ்வினால் நிலைநாட்டப்பட்ட அமைப்பாகும். **எனவே மார்க்கத்தின் முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு முயற்சியையும் அவன் கிலாஃபத்துடன் தொடர்புபடுத்தி விட்டான். எனவே எப்போதாவது எந்த பொறுப்பாளருடைய உள்ளத்தில் 'தான்' என்ற அகந்தை உருவாகிறதென்றால், சுயநலம் உருவாகிறதென்றால் அவர் பாவமன்னிப்பின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.** எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றித்தில் ஆலிம்களின் அறிவு பயன்படவில்லை; அறிவுள்ளவர்களின் அறிவுத்திறன் பயன்படவில்லை. ஜமாஅத்தின் வேலைகளில் அசாதாரணமான விளைவுகள் உருவாகின்றனவென்றால், அது அல்லாஹ்வின் அருள் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பதனால் ஆகும். ஏனெனில் இதனுடன் தொடர்பு வைத்துக் கொள்வதன் காரணமாக அவற்றின் விளைவுகள் பற்றி அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். உலக விஷயத்தில் சந்தேகமின்றி அறிவு, ஞானம், திறமை பயன்படலாம். ஆனால் ஜமாஅத்தில் இருப்பவர்களுக்கு எந்நிலையிலும் மிகச் சிறந்த விளைவுகளுக்கு ஜமாஅத்தின் பணிகளில் தன்னை கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டவர்களாக ஆக்க வேண்டியது வரும்.

அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்ட புதிதாக பைஅத் செய்த இளைஞர்கள், சிறுவர்களுக்கு கிலாஃபத்துடன் உண்மையான தொடர்பு பற்றிய ஞானம் இல்லாததால் அவர்களுக்கு அதைப் பற்றி எடுத்துக் கூறுங்கள். இது ஆலிம்களின், பொறுப்பாளர்களின் பொறுப்பாகும். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கி விட்டான் என்றால் பிறகு உங்களின் மார்க்க அறிவையும் வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களின் கலப்பற்ற தன்மையையும், நன்றியுணர்வையும் வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் இறையச்சத்தையும் வளர்த்துக் கொள்ளுங்கள். **கிலாஃபத்துடன் உங்களின் தொடர்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள். கலீஃபாவின் விஷயங்களைக் கேளுங்கள். பிறகு அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யுங்கள். கிலாஃபத்துடன் உங்களுக்குள்ள தொடர்பை அதிகமாக்குங்கள்.** எவர்கள் இந்த விஷயத்தைப் புரிகின்றார்களோ அவர்கள் தமது நிலைமைகளிலும் அசாதரணமான மாற்றத்தை உணர்கிறார்கள்.

**இந்த பொறுப்பாளர்கள் கிலாஃபத்தின் முக்கியத்துவத்தையும் அதனுடன் உள்ள தொடர்பையும் உறுதிப்படுத்த முயற்சி செய்தால் அந்த பொறுப்பாளர்களின் முக்கியத்துவம் தானாகவே அதிகமாகி விடும்.** ஆக, இது ஆலிம்களின் பொறுப்பாகும். இதில் அனைவரும் அடங்குவார்கள். முரப்பிகள், பொறுப்பாளர்கள், மார்க்க அறிவு படைத்தவர்கள். அவர்கள் காலத்தின் கலீஃபாவுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும். உங்களின் செயல்களையும் காலத்தின் கலீஃபாவுக்கு கட்டுப்பட்டவையாக வையுங்கள். மற்றவர்களுக்கும் அறிவுரை செய்யுங்கள். **ஜமாஅத்தின் சீர்திருத்தத்திற்காக கலீஃபா ஏதாவது கூறுகிறார் என்றால் ஜமாஅத் சகோதரர்களுக்கு முன் அதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுங்கள். மழுங்கிய மூளை கொண்டவரும் புரியும் அளவுக்கு, மார்க்கத்தின்படி சரியான வழியில் செல்லுவதற்காக பாதையை பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அதை எடுத்துக் கொள்ளுங்கள்.**

கிலாஃபத்தின் விஷயங்களை கேட்பது மட்டுமல்லாமல் செயல்படும் நல்வாய்ப்பை அல்லாஹ் ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் ஆலிம்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் வழங்குவானாக. கிலாஃபத்தின் அருட்கொடையை தக்க வைத்துக் கொள்ளும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**